MALAI MALAR

DATE : 30.01.2023

PAGE NO: 03

## புதுவை பல்கலைக்கழகத்தில்

# உத்தியோக உட்சவ் கருத்தரங்கு

புதுச்சேரி, ஜன.30–

புதுவை பல்கலைக்கழகத்தின் சமூகப்பணித்துறையும், அவதார் மனிதவள நிறுவனத்தின் புராஜெக்ட் புத்ரி திட்டமும் இணைந்து உத்தியோக உட்சவ் 2023 என்ற ஒருநாள் கருத்தரங்கம் நடத்தியது.

புதுவை அரசு பள்ளிகளில் பயிலும்பெண் குழந்தைகளுக்கு மேற்க்கல்வி படிப்புகள், வேலை வாய்ப்புகள் மற்றும் தொழிற்பாதைகள் குறித்த இந்நிகழ்ச்சி புதுவை பல்கலைக்கழக மாநாடு மற்றும் கலாச்சார மையம் அரங்கத்தில் நடைபெற்றது.

சமூகப் பணித்துறையின் தலைவர் டாக்டர் அன்பு வரவேற்று பேசினார். புதுவை பல்கலைக்கழக துணை வேந்தர் குர்மீத் சிங் நிகழ்ச்சியில் பங்கேற்றார். பேராசிரியர் சுல்தானா ஷாஹீன் வரவேற்றார். அவதார் மனிதவள அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் டாக்டர் சவுந்தர்யாராஜேஷ் நன்றி கூறினார். நிகழ்ச்சியில் பள்ளி கல்லூரி மாணவ–மாணவிகள் பேராசிரியர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்த விபத்து குறித்து பைசலின் சகோதரர் பிலால் கொடுத்த புகாரின் பேரில் கோரிமேடு போக்குவரத்து போலீசார் வழக்கு பதிவு செய்துவிசாரணை நடத்தி வருகிறார்கள்.